**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**ஓ.எஸ்.எண்.101/2022** **நாள்.02.08.2024**

2024ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 02 நாள் பிரதிவாதி தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நரேஷ்குமார் | தொழில் | |
| த. பெ./க.பெ. | சிவலிங்கம் | சாதி | |
| கிராமம் | சென்னை | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 40 |

**பி.சா.1**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

I. எனது தகப்பனாரின் பூர்வீக கிராமம் செஞ்சி வட்டம் ,அவியூர் கிராமம் ஆகும். உங்கள் தந்தையின் உறவினர் இறப்பிற்கு அவியூர் கிராமத்திற்கு வருவார் என்றால் சரிதான். ஒவ்வொரு முறையும் உறவினர் இறந்துவிட்டால் அவியூர் கிராமத்திற்கு வந்து கர்ம காரியங்கள் செய்துவிட்டு செல்வார். உங்கள் தந்தை வழி பாட்டனார் சின்னான் உயிருடன் இருந்த வரை சொத்துக்களை பாகபிரிவினை பத்திரம் மூலம் பாத்தியபடுத்தி வைத்தாரா என்றால் அவருக்கு சொத்து இருப்பது பற்றி பிரதிவாதிகள் யாருக்கும் தெரியாது. திருமணம் நடந்து என் அம்மா , அப்பாவுடன் 45 ஆண்டுகள் வாழ்ந்தார்கள். உங்கள் தந்தை வழி பாட்டி ரங்கம்மாள் உயிருடன் இருந்த வரையில் உங்கள் அப்பாவும், அம்மாவும் கிராமத்திற்கு வந்து சென்றார்களா என்றால் முக்கியமான விஷயத்திற்கு மட்டும் வந்து பார்த்து விட்டு உடனே திரும்பி விடுவார்கள். தங்கும் அளவிற்கு அங்கு வசதி இல்லை. அவர்கள் உங்கள் பாட்டி வீட்டில் வந்து தங்கவில்லை என்று வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கீறிர்கள் என்று சொன்னால்சரியல்ல. உங்கள் அப்பா , அம்மா விற்கு என் பாட்டியின் தலைமையில் தான் திருமணம் நடந்தது என்றால் சரிதான்.

II.. வழக்கு சொத்துக்கள் சம்பந்தமாக ரங்கம்மாள் உயிருடன் இருந்த வரையில் எந்த பாக பிரிவினை பத்திரமும் எழுதிவைக்கவில்லை என்றால் அவருக்கு சொத்தே இல்லை. வழக்கு சொத்து வாதி, சிவலிங்கம், ரங்கம்மாள் அடங்கிய பொது குடும்பத்திற்கு பாத்தியமான சொத்து என்றால் இல்லை. என் தந்தை சிவலிங்கத்திற்கும் ,தாயார் யசோதாவிற்கும் பாத்தியமான சொத்து . மேற்படி சொத்து உங்கள் தந்தையின் தனிப்பட்ட சொத்து இல்லை

என்றாலும், பொது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. என் தாயாரை விசாரித்தால் தான் சொத்து உங்கள் தந்தை பெயரில் எப்படி வந்தது என்ற விவரம் தெரியவரும் என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. உங்கள் தாயார் பொது குடும்பத்தை நிர்வாக செய்து வருவதால் அவரை தான் முக்கிய சாட்சியாக விசாரிக்கவேண்டும் என்றால் அவருக்கு காது கேட்காது, நடக்க முடியாது உடல்நிலை சரியில்லை. வழக்கிற்காக உங்கள் தாயாரை விசாரிக்க உடல்நிலைசரியில்லை என்று கூறிகீறீர்கள் என்றால் சரியல்ல. முதன்முதலில் சென்னை அரும்பாக்கத்தில் 1979 ல் குடிபெயர்ந்தோம். அந்த விவரம் என் பெற்றோர் சொல்லி தான் தெரியும். நீங்கள் குடிபெயர்ந்த வீடு சொந்த வீடு என்றால் சரியல்ல. இது வரை நாங்கள் வாடகை வீட்டில் தான் குடியிருந்து வருகிறோம். அரும்பாக்கத்திற்கு பிறகு அண்ணா நகர் கிழக்கில் அமைந்துள்ள ஆர்வி நகரில் குடிபெயர்ந்தோம். அரும்பாக்கத்தில் இருந்த வீட்டை விற்று விட்டு தான் அண்ணா நகரில் சொந்த வீடு வாங்கி குடிபெயர்ந்தீர்கள் என்றால் சரியல்ல.

III. தற்போது முகப்பேரில் குடியிருந்து வருகிறீர்கள் என்றால் நாங்கள் முகப்பேரில் வசித்ததில்லை. நாங்கள் தற்போது அண்ணா நகர் கிழக்கு, G Block ல் வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறோம். பி.சா.ஆ.7 ல் எங்களுக்காக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஒதுக்கிய வீட்டிற்கான உத்தரவு என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் வாக்காளர் அடையாள அட்டை விவரங்களில் வழங்கப்பட்ட தேதி 1998 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1998 யிலிருந்து நீங்கள் சென்னையில் வசித்து வந்து வாக்காளர் அடையாள அட்டை பெற்றிருந்ததால் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் உங்களுக்கான வீட்டை ஒதுக்கீடு செய்தது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.7 ல் கண்டுள்ள கைரேகை எனது தந்தை சிவலிங்கம். அந்த கைரேகை சிவலிங்கத்தினுடையது என குறிப்பிடப்பிடவில்லை என்றால் சரிதான். உத்தரவு நகல் 10.07.2020 ல் வழங்கப்பட்டது. என் தந்தை 10 ம் வகுப்பு வரை படித்துள்ளார். என் தந்தை வெளி அனுபவம் உடையர் , தமிழ் நன்கு படிப்பார் என்றால் சரிதான். என் தந்தை தமிழிலும், ஆங்கிலத்திலும் கையெழுத்து செய்வார். 2019 ல் என் தந்தைக்கு உடல் நலம் சரியில்லாமல் இருந்ததால் அவரால் கையெழுத்து போடமுடியவில்லை அதனால்கைரேகை போட்டார் . சிவலிங்கம் என்று கையொப்பம் செய்தார் வாதிக்கு பாகம் கிடைத்துவிடும் என்பதால் தான் கைரேகையை வைத்து ஆவணத்தை ஜோடித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

IV. வழக்கு 1, 2 அயிட்ட சொத்துக்களை கிரையம் பெறும் போது நீங்கள் மைனர் என்றால் சரிதான். கிரைய தொகையை யாரிடம் பெற்று எப்படி கிரையம் பெறப்பட்டது என்று உங்களுக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல. 25.03.1997 மற்றும்

18.03.1997 ல் சிவலிங்கம் பெயரில் வழக்கு 1, 2 அயிட்ட சொத்துக்கள் அவரது தாயார் ரங்கம்மாள், மற்றும் வாதி, உடனியிருந்து சிவலிங்கம் பெயரில் 1, 2 அயிட்ட சொத்துக்கள் கிரையம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. ரங்கம்மாள் மற்றும் வாதி உடன் இல்லை. அவர்கள் இல்லை என்று உங்களுக்கு எப்படி தெரியும் என்றால் அப்போது எனக்கு 13 வயது என் தந்தை உடன் அழைத்து சென்றதால் எனக்கு தெரியும். 13 வயதில் உங்களுக்கு மேற்படி விவரம் தெரிந்திருக்க வாய்பில்லை என்று சொன்னால் சரியல்ல. அதே வருடம் 25.03.1997 ல் ராமசந்திரன் என்பவருக்கு வாதியும், சிவலிங்கமும் சேர்ந்து பரிவர்த்தனை பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். வழக்கு 1, 2 அயிட்ட சொத்துக்கள் எழுதி வாங்கிய அதே தேதியில் தான் பரிவர்த்தனை பத்திரம் எழுதப்பட்டது என்றால் 2 வது ஆவணம் எழுதப்பபட்ட தேதியில் பரிவர்த்தனை பத்திரம் எழுதப்பட்டது. அதனால் தான் வழக்கு சொத்துக்கள் அனைத்துமே வாதி மற்றும் பிரதிவாதிகள் அடங்கிய பூர்வீக சொத்துக்ககள் என்றால் சரியல்ல.

V. குடும்ப சொத்தை பரிவர்த்தனை செய்யவில்லை. என் தந்தையின் தனிப்பட்ட சொத்தை தான் பரிவர்த்தனை செய்தார். பரிவர்த்தனை பத்திரத்தில் எழுதப்பட்ட சொத்து உங்கள் தகப்பனாரும் , வாதியும் அடங்கிய பொது குடும்ப சொத்து என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.9 ல் பரிவர்த்தனை பத்திரத்தில் வாதியும், வாதியின் சகோதரரான சிவலிங்கமும் மற்றும் ராமசந்திரன் என்பவரும் சேர்ந்து எழுதி கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதில் எ ஷெட்டியூல் உள்ள சொத்துக்கள் ராமசந்திரன் அடைய வேண்டியது என்றும், பி ஷெட்டியூலில் கண்ட சொத்துக்கள் வாதியும், சிவலிங்கமும் அடைய வேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த வகையில் சிவலிங்கம் பெயரில் சொத்துக்கள் கிரையம் பெற்றிருந்தாலும் அதில் வாதிக்கு பங்கு உள்ளது என்றால் சரியல்ல. சின்னான் இறந்த பிறகு அவர்களது குடும்பத்தில் என் தந்தை தான் மூத்த ஆண்மகன் என்றால் சரிதான். அந்த வகையில் குடும்ப மூத்த உறுப்பினர் சொத்துக்கள் வாங்கினால் அவருக்கு பின் பிறந்த குமாரர்கள் , குமாரத்திகளுக்கு பங்கு உண்டு என்றால் 3,4 அயிட்ட சொத்துக்களில் வாதிக்கு பங்கு உண்டு. பட்டா வாதி, பிரதிவாதி ஆகியோர் பெயரில் உள்ளது. அதே போல தான் வாதிக்கு 1, 2 சொத்துக்களில் பங்கு உண்டு என்றால் சரியல்ல.

VI. என் தந்தை வழி பாட்டியான ரங்கம்மாவின் இறப்பிற்கு கர்ம காரியத்திற்கு என் தந்தையும், வாதியும் சேர்ந்து செய்தார்கள் என்றால் சரியல்ல. என் தந்தை தான் முன்னின்று முழுசெலவையும் செய்தார். அதன் பின்னிட்டு எந்த வருடம் உங்கள் தந்தை அவியூர் கிராம

தலைவராக இருந்தார் என்றால் 2005 யிலிருந்து 2011 வரை இருந்தார். உங்கள் தந்தை பரிசீட்சியமான நபர் என்பதால் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால் இருக்கலாம். தேர்தலில் வாதியும் உடனியிருந்து என் தந்தையை தலைவர் பதிவுக்கு வரவைத்தார் என்றால் சரியல்ல. உங்கள் தந்தை இறப்பு மற்றும் கர்மகாரியம் செஞ்சி வட்டம் , அவியூர் கிராமத்தில் தான் நடந்ததுஎன்றால் சரிதான். அந்த செலவு வாதியும், நீங்களும் சரிபாதியாக செய்தீர்கள் என்றால் சரியல்ல. நான் மட்டுமே செலவு செய்தேன். என் சித்தப்பா விஜயன் என்பவரிடம் ரூ. 1,80,000/- கொடுத்தேன். செலவுகளை அவர்தான் பார்த்தார். அவரை விசாரித்தால் முழுசெலவும் யார் செய்தார்கள் என்ற விவரம் தெரியவரும் என்றால் நீங்கள் விசாரித்துக்கொள்ளுங்கள். என் தகப்பனார் மே 8 , 2021ல் இறந்தார். உங்கள் தகப்பனார் இறக்கும் வரை தாவா சொத்துக்கள் பொது குடும்ப சொத்துக்களாகதான் இருந்து வந்தது என்றால் சரியல்ல. என் தகப்பனாரின் தனிப்பட்ட சொத்துக்கள் ஆகும். 1,2,3,4 அயிட்ட சொத்துக்கள் என் தகப்பனாரின் தனிப்பட்ட சொத்துக்களாகும். உங்கள் தந்தைக்கு தனிப்பட்ட சொத்துக்கள் இல்லை என்றாலும் தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் பொது குடும்ப சொத்துக்கள் என்றால்சரியல்ல. உங்கள் தகப்பனார் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்தார்என்பதற்கு அவர் பெயரில் தீர்வை ரசீதுகள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை . மேற்படி ஆவணங்கள் என் வசம் உள்ளது. எந்த காலத்திலும் உங்கள் தந்தை வழக்கு சொத்துக்களை அனுபவித்தது கிடையாது என்றாலும் வாதி தான் மொத்த சொத்துக்களையும் பயிர்செய்து அதில் இருந்து வந்த வருமானத்தை உங்கள் தந்தையிடம் கொடுத்துவிடுவார் என்றால் சரியல்ல. எனவே தாவா சொத்துக்கள் பொது குடும்ப சொத்துக்கள் என்பதால் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.